Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 85

சனிக்கிழமை
19 பெப்ரவரி 2022

மாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,282
மொத்தம் 6,34,333

**உயிரிழப்பு**
நேற்று 23
மொத்தம் 15,949

# சிறுபான்மையினரை அடக்குவதற்காகவே பயங்கரவாதச்சட்டம்

## ராஜபக்சக்களை தோலுரித்தார் சந்திரிகா
## நீக்கப்பட வேண்டும் என்றும் முழக்கம்



கொழும்பு, பெப்ரவரி 19

சிறுபான்மை மக்களை அடக்குவதற்காகவே ராஜபக்சக்களால் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது - பயன்படுத்தப்பட்டு வருகின்றது -என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க.

15

# தடுப்பூசி பெற்றவர்களுக்கே திருக்கேதீச்சரத்தில் அனுமதி

## மன்னார் மாவட்டச் செயலர் மீண்டும் உறுதி

மன்னார், பெப். 19

மன்னார் திருக்கேதீச்வர ஆலய மகா சிவராத்திரி நிகழ்வுக்காக நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகைதர அனுமதி வழங்கியுள்ளோம். எனவே திருக்கேதீச்சரத்துக்கு வருகை

15



பூசகரின் வீட்டில்

# 24 பவுண் நகைகளை திருடியவர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள பூசகர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் வீடுடைத்து 24 பவுண் நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் பொலி

15




"அப்ப இவ்வ ஆட்சியில இருக்கேக்க இதை இல்லாமல் செய்திருக்கலாமே? எல்லாம் சுடலை ஞானம் வாருங்கோ"

## தாயகம் சென்றனர் தமிழக மீனவர்கள்

சென்னை, பெப். 19

இலங்கைச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட 47 தமிழக மீனவர்களும் நேற்றுக் காலை தமிழகம் சென்றடைந்தனர்.

கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட

15

அமைச்சரின் வாக்குறுதியை அடுத்து

# அரச மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் தற்காலிக வாபஸ்!

கொழும்பு, பெப். 19

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் சுகாதார அமைச்சருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது, அமைச்சர் எழுத்துமூல வாக்குறுதிகளை வழங்கியதை அடுத்து ஏற்கனவே முன்

15

## வெட்டு....வெட்டு மின்வெட்டு!

### இனிமேல் தினசரி இருளுக்குள் இலங்கை

கொழும்பு, பெப். 19

நாளாந்தம் மின் துண்டிப்பை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலை

15

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# பூஜித, ஹேமசிறி நேற்று விடுதலை

கொழும்பு, பெப். 19

ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜய

15

# பயங்கரவாதத் தடைச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இந்த நிலைப்பாட்டில் நாம் அன்றும் இன்றும் உறுதியாக நிற்கின்றோம் இவ்வாறு வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்ட



மைப்பினர் நாடளாவிய ரீதியில் மிகப் பெரிய அளவில் கையெழுத்துக்களைச்

15

## அராலியில் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், பெப். 19

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் பெண்ணொருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

15

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான கையெழுத்துச் சேகரிப்பு

# அரசியல் நிரலின் திட்டமிட்ட நாடகம்

## பிரதமரின் இணைப்பாளர் விசனம்

கொழும்பு, பெப். 19

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கையெழுத்துச் சேகரிப்பு, எதிர்க்கட்சிகளின் அரசியல்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலப்புத் திருமணத்தால் நல்லிணக்கம் ஏற்படுமாம்!

## யாழில் வைத்துக் கூறினார் ஊடக அமைச்சர் டலஸ்



**யாழ்ப்பாணம், பெப். 19**

**அரசமைப்பு சீர்திருத்தங்களைவிட இனக்கலப்புத் திருமணங்கள் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசியல்வாதிகளை விட ஊடகங்களுக்கே கூடிய வகிபாகம் உள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இளைஞர் விவகார அமைச்சராக நான் பதவிவகித்தேன். அப்போது வடக்கிலிருந்து 400 இளைஞர்,யுவதிகளை மாத்தறை மாவட்டத்துக்கு அழைத்துச் சென்றேன். மாத்தறை மாவட்டத்தில் இதற்காக எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. வடக்கிலிருந்து இளையோரை நான் அழைத்து வந்தமையை, அங்குள்ள இளையோரின் பெற்றோர் அச்சத்துடன் பார்த்தனர். ஆனால் இதன் பின்னர் இங்கிருந்து சென்ற 4 பேர் அங்குள்ளவர்களைக் காதலித்துத் திருமணம் செய்தனர். அவர்களுக்கு பிள்ளைகள் பிறக்கும்போது நான்தான் பெயர் வைப்பேன் என்றும் சொன்னேன். அதன்படி அவர்களுக்கு பிறந்த முதலாவது குழந்தைக்கு மாயா என்று பெயர் வைத்தேன். மாத்தறையின் முதல் எழுத்தான 'மா'வையும், யாழ்ப்பாணத்தின் முதல் எழுத்தான 'யா'வையும் இணைத்து அதனை வைத்தேன். இவ்வாறான இனக்கலப்புத் திருமணங்கள் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்.

இலங்கையில் இந்த மாவட்டத்தில் மாத்திரம்தான் 5 பிராந்திய பத்திரிகைகள் வெளிவருகின்றன. அது இந்த மாவட்டத்துக்குரிய சிறப்பு, -என்றார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது இங்கு பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருப்பதற்காக போராட்டங்களை நடத்துகின்றனர், என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தனது உரையில், எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டங்களில் ஊடகவியலாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும் என்று மாவட்டச் செயலரைக் கேட்டுக் கொண்டார். (ஒ-5)

## கறுப்புப்பட்டியுடன் ஊடகவியலாளர்கள் ஊடக அமைச்சரின் நிகழ்வில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொண்ட நிகழ்வில், ஊடகவியலாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கலந்து கொண்டனர்.

அரச வெளியீட்டுப் பணியகத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் திறப்பு மற்றும் பிரதேச ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவர்கள் அனைவரும் கறுப்புப்பட்டியுடன் பங்கேற்றனர்.

கொழும்பில் மூத்த ஊடகவியலாளர் சமுத்தித மீதான தாக்குதல் மற்றும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதலுக்கு நீதி கோரி கறுப்புப் பட்டி அணிந்து கலந்து கொண்டதாக ஊடக அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (ஒ-5)

## தேசிய பாடசாலைகளாக மாறும் 125 பாடசாலைகள்

கொழும்பு, பெப்.19


125 பாடசாலைகள் எதிர்வரும் இரு மாதங்களில் தேசிய பாடசாலை தரத்துக்கு உயர்த்தப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு தேசிய பாடசாலையும் இல்லாத 125 பிரதேச செயலக பிரிவுகளில், தலா ஒரு பாடசாலை வீதம் தேசிய பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளன என்று அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கித்சிறி லியனகம தெரிவித்தார்.

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை 831 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும், அந்தப் பாடசாலைகள் இந்த வருட இறுதிக்குள் கட்டங்கட்டமாக தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை 9 மாகாணங்களிலும் 9 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கித்சிறி லியனகம கூறினார்.

வசதிகளுடன் கூடிய கற்றலுக்கான சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



## 286 மில்.கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி

கொழும்பு, பெப்.19

கடந்த வருடம் சுமார் 286 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்று தேயிலை இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 20.45 மில்லியன் கிலோகிராம் அதிகமாகும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் 265.57 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டள்ளது. (எ-இ)

## வெளியீட்டுப் பணியகம் யாழில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

அரச தகவல் திணைக்களத்தின் வெளியீட்டுப் பணியகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவால் திறந்து வைக்கப்பட்டது.

அரச வெளியீட்டு பணியகத்தின் ஏழாவது மாவட்ட அலுவலகமாக இந்த அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது. இதற்கு முன்னர் கண்டி, காலி, அநுராதபுரம், வவுனியா, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தப் பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசால் வெளியிடப்படும் வெளியீடுகளை வார நாள்களில் இங்கு கொள்வனவு செய்ய முடியும்.

இந்த நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் ஆகியோரும் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-5-26)

# தொற்றிலிருந்து மக்களை காத்ததில் ஊடகங்களின் பங்கு காத்திரமானது

## வடக்கு மாகாண பிரதம செயலர் புகழாரம்

யாழ்ப்பாணம், பெப். 19

கொரோனா பேரிடர் காலத்தில் மக்களை விழிப்பூட்டி அதிலிருந்து பாதுகாப்புப்பெறுவதற்கு ஊடகங்கள் ஆற்றிய பணி மகத்தானது. அதற்காக நன்றி கூறுகின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலர் எஸ்.எம்.சமன் பந்துல சேன தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், பிராந்திய ஊடகவியலாளர்களுடனான ஊடக அமைச்சரின் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

கொரோனா பேரிடர் காலத்தில் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாமல் தொடர்வதற்கு ஊடகங்களின் தொழில்நுட்பமும் ஒரு காரணம். அதற்கான வழிமுறையை ஊடகங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன. அதேபோன்று கொரோனாக் காலத்தில் மக்களை பாதுகாக்கும் பணியை திறம்பட முன்னெடுத்தமைக்காக ஊடகங்களுக்கு நன்றி கூறுகின்றேன். சமூகத்தை நல்வழிப்படுத்தும் பொறுப்பு ஊடகங்களுக்குரியது. ஊடகமும் அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தன. வடக்கின் அபிவிருத்திக்கு ஊடகங்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றேன். நான் வடக்கு மாகாண பிரதம செயலராக, வடக்கு மாகாணத்துக்கு வருவதற்கு முன்னர் வரையில் தேசிய ஊடகங்களைப் பற்றித்தான் அறிந்திருந்தேன். ஆனால் இங்கு வந்த பின்னர்தான் பிராந்திய ரீதியில் பத்திரிகைகள் அச்சிட்டு வெளியாவதை அறிந்து கொண்டேன்' என்றார் பிரதம செயலர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற எந்தவொரு நிகழ்வும் உடனுக்கு உடன் சர்வதேச ரீதியாக தெரியவரும். அந்தளவு தூரத்துக்கு இங்கு ஊடகங்கள் இருக்கின்றன. பிராந்தியப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, இணைய ஊடகங்கள் என்று பலவும் உள்ளன, என்றார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிமலுடன் மோதல் ரஞ்சித் இடமாற்றம்?

கொழும்பு, பெப்.19
இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுடன் ஏற்பட்ட மோதலை அடுத்து, அந்த அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்க இடமாற்றப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் வேறொரு இராஜாங்க அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனத்தில் உயர் பதவியில் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்கவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, அமைச்சின் தனிப்பட்ட ஊழியர்களை அண்மையில் நீக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-4-இ)

# நாணய நிதியத்தை நாடும் திட்டம் அரசுக்கு கிடையாது

## அமைச்சர் சந்திரசேன கூறுகிறார்

கொழும்பு, பெப்.19

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தை நாடும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது என காணி விவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனாத் தாக்கத்தின் பின்னரான காலப் பகுதியில் பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறோம். நெருக்கடியான நிலைமையை சீர்செய்ய அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. மாற்று வழிமுறைமை ஊடாக தற்போதைய நிலைமையைச் சமாளிக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியுள்ளார்.

தற்காலிக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் ஒரு பொறிமுறையாக சர்வதேச நாணய நிதியம் காணப்படுவதால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் நாணய நிதியத்தை நாடுமாறு வலியுறுத்துகிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் அது அரச ஊழியர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அரச செயலொழுங்கிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை பெரும்பாலான அமைச்சர்கள் அமைச்சரவை கூடலின் போது எடுத்துரைத்துள்ளார்கள் -என்றார்.

(எ-இ)



# தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை நிறுத்தத் தீர்மானிக்கவில்லை

## பிரதி சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19
ஏப்ரல் 30 ஆம் திகதியின் பின்னர் தடுப்பூசி வேலைத் திட்டத்தை நிறுத்த இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பிரிவுகளில் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தற்போது பரவும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தொடர்பில், அறிகுறிகள் தென்படுவோர், உடனடியாக பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும். அதனை அலட்சியப்படுத்தி, சுகாதார பழக்கவழக்கங்களைக் கைவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-4-இ)

# உயர்தரப் பரீட்சையில் முறைகேடுகள் குறைவு

கொழும்பு, பெப்.19
கடந்த முறையுடன் ஒப்பிடுகையில் இந்த முறை கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையில் முறைகேடுகள் குறைவாக உள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தமுறை இரண்டு முறைகேடுகள் மட்டுமே பதிவாகியுள்ளன என்று தெரிவித்துள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை விநியோகிப்பதற்கும் தாள்களை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட நேரத்தை கண்காணிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைகள் வெற்றியளித்துள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார். வலயப் பிரிவுகளின் கண்காணிப்பும் இதுவரை வெற்றியளித்துள்ளது என்று ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

(எ-இ)

# புதினம் தெரியுமோ?

"புலிகள் இருக்கேக்க இலங்கையின்ர மற்ற இடங்களை விடவும் வடக்கு, கிழக்கில தான் எல்லாப் பரீட்சைகளையும் நாங்கள் எந்த மோசடியோ, குளறுபடியோ இல்லாமல் ஒழுங்கா வைக்க முடிஞ்சது. அந்தளவுக்கு ஒவ்வொரு பரீட்சையையும் நேர்மையாவும், பிரச்சினை இல்லாமலும் நடத்தவேணும் எண்டதில புலிகள் அக்கறை காட்டினவை. அப்பிடியான அக்கறை ஒவ்வொரு பரீட்சை மேற்பார்வை யாளருக்கும் இருக்க வேணும்."

இப்பிடிச் சொன்னது ஆரெண்டு நினைக்கிறியள்? இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின்ர ஆணையாளர், இந்த வருசம் ஏ.எல் எக்ஸாம் தொடங்கமுதல், அதிகாரிகளோட நடத்தின கலந்துரையாடலிலதான் இப்பிடிச் சொன்னவர். அந்தளவுக்கு வடக்கு, கிழக்கு எண்டாலே எக்ஸாமெல்லாம் ஒழுங்கா நடக்குமெண்டது சிங்கள ஆக்களின்ர நம்பிக்கை. ஆனால் அந்த நல்லபேரைக் கெடுக்கிற மாதிரி சில விசயங்கள் நடக்குது. அதில ஒண்டுதான், அண்டைக்கு பட்சி சொன்ன மடு வலயத்தில இருக்கிற தேசியப் பாடசாலையில நடந்த கூத்து.

அந்த மோசடி பற்றி இன்னும் கொஞ்சத் தகவல் பட்சிக்கு கிடைச்சிருக்கு. அந்தப் பள்ளிக்கூட அதிபரின்ர மகன்தான் இப்பிடி மோசடி செய்ய வெளிக்கிட்டு பிடிபட்டவர். ஆனால் அதுக்கு திட்டம் போட்டது அந்த மாணவனின்ர அப்பாதான். அதாவது தேசியப்பாடசாலை அதிபர். அவரின்ர பள்ளிக்கூடத்தில ஐ.சி.ரி பாடம் படிப்பிக்கிற மாஸ்ரர், இன்னொரு பள்ளிக்கூடத்தில இருக்கிற எக்ஸாம் ஹோலில பரீட்சை நோக்குநரா போயிருக்கிறார். அவரிட்டத்தான் அதிபர் 'இணைந்த கணிதம்' வினாத்தாளை போனில படம் எடுத்து அனுப்பச் சொல்லியிருக்கிறார். அவரும் அதிபருக்கு அனுப்பியிருக்கிறார். அதை இன்னொரு மாஸ்ரருக்கு அனுப்பி, அவர் எழுதின விடையை அதிபர் தன்ர மகனுக்கு அனுப்பி இருக்கிறார்.

மகன் எக்ஸாம் ஹோலுக்கு போகேக்க அங்க தான் கொண்டு போன புத்தகம், கொப்பி எல்லாம் வெளியில வைச்சிட்டு உள்ளுக்க போயிருக்கிறார். எக்ஸாமுக்கு வாற மாணவர்களை உடற்பரிசோதனை செய்யிறேலைத்தானே. அதைத் தனக்குச் சாதகமாப் பாவிச்சு, சேர்ட்டுக்குள்ள போனை 'சைலண்டில' போட்டு கொண்டு போயிருக்கிறார் அந்த மாணவன். பிறகு விடை வந்தவுடன 'வைப்பிரேசன்' சத்தம் வர, அங்காலையும் இஞ்சாலையும் ஆக்கள் இல்லையெண்டு உறுதிப்படுத்திப்போட்டு, போனை வெளியில எடுத்து, விடைத்தாளால அதை மறைச்சு மேசையில வைச்சிட்டார். பிறகு மெல்ல மெல்ல போனைப் பார்த்து ஆள் விடை எழுத வெளிக்கிட, அங்க நோக்குநரா நிண்டவை அதைக் கண்டுபிடிச்சிட்டினம். உடனேயே போனைப் பறிச்சு, சீல் வைச்சு அதை ஆய்வு செய்ய மேலிடத்துக்கு அனுப்பிட்டினம். பிறகு மாணவனை விசாரிக்க அவன் தான் நடந்ததை எல்லாம் சொல்லியிருக்கிறான். அண்டைக்கு அந்த மாணவனை தொடர்ந்து பரீட்சை எழுத விட்டிருக்கினம். ஆனால் அதுக்குப் பிறகு மற்றப்பாடங்கள் எழுத அவனை விடேலை. அவன் செய்த குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால், இனிமேல் இலங்கையில எந்தவொரு எக்ஸாமும் அவனால எழுத ஏலாது. அதோட எக்ஸாம் பேப்பரை போட்டோ எடுத்து அனுப்பின ஐ.சி.ரி மாஸ்ரர் பணியாற்றின பரீட்சை மண்டபத்தில, எக்ஸாம் டியூட்டி செய்த எல்லாரையும் நிப்பாட்டி, அவையையும் விசாரணை செய்யினம். அந்த மண்டபத்துக்கு இப்ப வேற ஆக்களை டியூட்டிக்கு போட்டிருக்கு.

தன்ர மகனை குறுக்கு வழியில பாஸ் பண்ண வைக்க நினைச்சு, தன்ர பிள்ளையின்ர வாழ்க்கையிலயும், தன்ர பதவிக்கும் ஆப்பு வைச்ச அந்தத் தேசியப் பள்ளிக்கூட அதிபரை என்னெண்டு சொல்லுறது???



- பட்சி

# இலங்கைக்கு உதவினாலும் ஒப்பந்தங்களை மீறக்கூடாது

## இந்தியாவுக்கு மனோ அறிவுரை

கொழும்பு,பெப்.19
இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வரும் உதவிகள், பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுவது முறையானதல்ல. கடந்த கால ஒப்பந்தங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

1954 (நேரு- கொத்தலாவலை), 1964 (சிறிமா-சாஸ்திரி), 1974 (சிறிமா-இந்திரா), ஆகிய ஆண்டுகளில் இலங்கை இந்தியத் தலைவர்கள் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் படியும், இந்தியப் பிரதமர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் படியும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பான கோரிக்கைகள் நல்லெண்ண அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசுக்கும், தமிழக அரசியல் கட்சிகளுக்கும் இது பற்றி தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது.




தோட்டத் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து பெருந்தோட்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி, பயன்பெற்றதன் அடிப்படையில் பிரிட்டன் அரசுக்கும் இருக்கும் கடப்பாட்டையும் எடுத்துக் கூறி, பேச்சில் ஈடுபடவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குத் தொற்று வடக்கில் தீவிரம்!


## துப்புரவாக்கல் பணிகளை முன்னெடுக்க உள்ளூராட்சி சபையினருக்கு அறிவுறுத்து



**யாழ்ப்பாணம், பெப்.19**

**யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருவதால், மாகாணத்தின் அனைத்து இடங்களிலும் கிராமிய மட்ட துப்புரவாக்கல் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என மாகாண சுகாதார சுதேச மருத்துவ மற்றும் சிறுவர் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளர் உள்ளூராட்சி சபையினரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றில் வட்டாரங்கள்தோறும் கழிவகற்றல் முகாமைத்துவத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறும், டெங்கு பரம்பலுக்கு காரணமான நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அவற்றினை இல்லாதொழித்தலும், பாவிக்கப்படும் வெற்று பிளாஸ்டிக், வீதியோரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் வீசப்பட்டு இருப்பவைகளை அகற்றுவதற்கும், அவற்றினை போடுவதற்குரிய குப்பைத் தொட்டிகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் நன்னீர் நிலைகள், நுளம்புகள் பெருகுவதற்கு உகந்த சூழலாக காணப்படுவதால் குடிதண்ணீர்த் தொட்டிகள், குடிதண்ணீர் சேமிப்பகங்கள், கொள்கலன்கள், கூரைப் பீலிகள், போன்றவற்றில் நுளம்பு பெருகாதவாறு ஏற்பாடுகள் முன்னெடுக்க வேண்டும் என்று அறிவித்துள்ளார். (ய-9)



## மதுப் போத்தல்களுடன் முதியவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.19

மதுபானம் விற்றார் என்ற குற்றச்சாட்டில் முதியவர் ஒருவர் காரைநகர் களபூமிப் பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் வீட்டில் வைத்து மதுபானம் விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சித்தங்கேணி மதுவரி நிலையத்தினர் இணைந்து சோதனையை முன்னெடுத்தனர். இதன்போது அவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 125 காற்போத்தல் மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன. (வ-27)

### வவுனியா மருத்துவமனை

## பதில் பணிப்பாளராக நிலக்ஸன் நியமனம்

வவுனியா, பெப்.19

வவுனியா பொது மருத்துவமனையின் பதில் பணிப்பாளராக பிரதி பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியாக கடமையாற்றிய மருத்துவர் ஜே. எம். நிலக்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்குறித்த மருத்துவமனையின் பணிப்பாளராக இருந்த மருத்துவ கலாநிதி க. ராகுலன் மேற்படிப்பொன்றுக்காக மத்திய சுகாதார அமைச்சுக்கு சென்ற நிலையிலேயே மருத்துவமனையில் காணப்பட்ட வெற்றிடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-110)



## மரக் கடத்தல்: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.19

சட்டவிரோதமாக மரத்தைக் கடத்திச் சென்றார் என்ற குற்றச் சாட்டில் ஒருவரை தெல்லிப்பழைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அனுமதிப்பத்திரமின்றி மரத் தீராந்திகளை ஏற்றிச் சென்றார் என 32 வயதான ஒரு வரே தெல்லிப்பழை பிரதான வீதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மரத்தீராந்திகளும் அவற்றை ஏற்றிச்சென்ற பட்டாரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-125)



தருமபுரம் புதிய உதயம் சிறுவர் முன்பள்ளியில் சிறார்களின் சந்தை நேற்று முன்தினம் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி ஆசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் பெற்றோர்களின் ஒத்துழைப்பில் சிறார்களின் சந்தை வியாபாரம் இடம்பெற்றது. (எ-ரி1-113)

## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்




யாழ்ப்பாணம், பெப்.19

மோட்டார் சைக்கிளும் வானும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். கொடிகாமத்திலிருந்து வந்த வானும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-20)

## வெளிநாட்டுப் பயணத்துக்கு பி.சி.ஆர் கட்டணம் ரூ.6500!

யாழ்ப்பாணம், பெப்.19

வெளிநாட்டுப் பயணத்துக்கான பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்பவர்களிடம் 6 ஆயிரத்து 500 ரூபா கட்டணமாக அறவிடப்படும் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவித்தார். மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. (வ-20)



## எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.19

நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது என நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உணவு தயாரித்துக்கொண்டிருந்த தருணத்தில் இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-125)

## கொழும்பு மாநகரக் குழுவினர் யாழ்.மாநகரசபைக்கு வருகை

கொழும்பு.பெப்.19

கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க மற்றும் அவரது குழுவினர் உத்தியோக பூர்வ பயணமாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

குழுவினர் நேற்று மதியம் யாழ். மாநகர சபைக்குப் பயணித்தனர். பிரதி மேயர் துரைராஜா ஈசன் தலைமையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது இரண்டு மாநகர சபைகளதும் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கொழும்பு பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் மற்றும் யாழ். பிரதி மேயர் துரைராஜா ஈசன் ஆகியோர் நினைவுச் சின்னங்களை பரிமாறிக்கொண்டனர். தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் நூலகம் மற்றும் முக்கியமான இடங்களுக்கும் குழுவினர் பயணித்தனர். (எ-4-27,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தியை மேம்படுத்த 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கிளிநொச்சி,பெப்.19**

**நாட்டில் பால் உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும் என்பதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வைத்தியர்கள் மற்றும் அதிகாரிகளுடனான சந்திப்பு, கிளிநொச்சி மாவட்டச் செயலக பயற்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பால் மற்றும் முட்டை உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும் என்பதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் எதிர்பார்ப்பு. அதற்காக நிதியமைச்சால் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.- என்றார்.

சந்திப்பில், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. இதில் மாவட்டச் செயலர்கள், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள்-கலந்து கொண்டனர். (எ-4,113)

## அரங்கக் கதையாடல்

யாழ்ப்பாணம், பெப். 19

புத்தாக்க அரங்க இயக்கத்தால் மெய்நிகர் இணைய வழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடலின் 84 ஆவது நிகழ்வு, நாளை இரவு 7 மணிக்கு எஸ்.ரி.அருள்குமரனின் "அரங்கப் பார்வைகள்" என்ற நூல் அறிமுகத்துடன் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை நாடகத்துறை ஆசிரியர் க.கஜேந்திரன், மதிப்பீட்டுரையை எழுத்தாளர் உடுவிலூர் கலா ,ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் பண்டிதர் செ.த.குமரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக டென்மார்க் நாடகச் செயற்பாட்டாளர் க. ஆதவன் கலந்துகொள்வார்.

ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261,கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ரி)

## சிரமதானம்

சாவகச்சேரி, பெப். 19

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில், விசேட டெங்கு சிரமதானம் இன்று கொடிகாமம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் சுகாதாரப்பிரிவினர், பிரதேச சபையினர் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து பொதுமக்களின் பங்களிப்புடன் குறித்த இடங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுக்கவுள்ளனர். (ரி-9)

## கசிப்புடன் யுவதி கைது

யாழ்ப்பாணம், பெப்.19

கசிப்பை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை தெற்கு பகுதியில் வைத்து அதே பகுதியைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. யுவதிக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது (வ-25)

## மதக்குரோதத்தை விதைக்காதீர்கள்

### சிவசேனை கோரிக்கை

வவுனியா, பெப்.19

மதக்குரோதத்தை விதைத்து, மக்களிடையே விரிசலை ஏற்படுத்தாதீர் என்று சிவசேனை அமைப்பின் இணைத்தலைவர் தமிழ்த்திரு மாதவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி தினத்தில் நுழைவாயில் உடைக்கப்பட்டது. தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நேரத்தில் அங்கு மாதா சொரூபத்தை நிறுவி இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே விரோதங்களை ஏற்படுத்த விரும்புகின்றீர்களா?. இந்துக்கள் அனைத்து தெய்வங்களையும் மதிப்பவர்கள். கிறிஸ்தவர்கள் வீடுகளில் இந்துக் கடவுளர்களின் சிலைகள் இருக்காது. ஆனால் இந்துக்களின் இல்லங்களில் யேசுநாதரின் சிலையை வைத்திருப்பார்கள்.

எதிர்வரும் நாள்களில் சிவராத்திரி தினம் சிறப்பாக நடைபெறவுள்ளது. எனவே அனைத்து இந்துக்களும் உங்களது இல்லங்களில் நந்திக்கொடியை ஏற்றி உங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துங்கள். சைவர்களுக்கு நீதி வேண்டும். அதைப் பெற்றுத்தாருங்கள். நாம் வன்முறையைத் தூண்டவில்லை எமக்கு நீதி வேண்டும் - என்றார். (எ-4,110)



ஈழத்தின் புகழ்பூத்த இசைநாடகக்கலைஞர் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் உருவச்சிலை, காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினரின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, வலிவடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி அதிபர்கள் கு.விமலன், வசந்தராணி சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ய)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், வாராந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்று வரும் "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரின் இந்த வாரக்கருத்தமர்வு இன்று "வாய்ச் சுகாதாரம் பேணுதல்" எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது.

சூம் செயலி இலக்கம் 899 8528 2023, கடவுச்சொல் 354485 என்பவற்றினூடாக கருத்தமர்வில் கலந்து பயனடையுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-ரி)



## பெண்களுக்கான ஆய்வு வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.19

பெண்களுக்கான பாதையை உருவாக்குதல் மற்றும் மாறிச் செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளிலான ஆய்வு வெளியீடு யாழ். தனியார் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற நிகழ்வில், அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மைத்திரேயி இராஜசிங்கம், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் சுரேந்திரகுமார், யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களுடன் பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகளும் யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.(எ-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 19

வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீர கத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மாலை 2.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசை ஆகியன இடம்பெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என்பதால் அடியார்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தேவஸ்தானக் குருக்கள் சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (எ-ரி)

## சிப்தொர புலமைப்பரிசில் விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, பெப். 19

சமுர்த்தி திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் சிப்தொர புலமைப் பரிசில் உதவித் திட்டத்துக்கு, தென்மராட்சி பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் இணைந்துள்ள சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த திட்டத்தில் மாணவர்களுக்கான உதவித்தொகை 2022 செப்ரெம்பர் மாதம் தொடக்கம் பரீட்சை எழுதும் மாதம் வரை மாதாந்தம் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவத்தை சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் பெற்று பூர்த்திசெய்து கற்கும் பாடசாலை அதிபர், பிரிவு சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்று 23 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இயங்கும் சமுர்த்தி தலைமைப்பீட அலகில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி-9)

குழந்தைகளுக்கான

# உணவுக் கொள்கலன்களால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து

கொழும்பு, பெப்.19

**குழந்தைகளுக்கு பால் புகட்டும் போத்தல் மற்றும் உணவு வழங்க பயன்படுத்தப்படும் சில கொள்கலன்களில் பிஸ்பெனால் ஏ எனப்படும் புற்றுநோயை உண்டாக்கும் இரசாயனம் உள்ளமை ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**



இலங்கை, பங்களாதேஷ், சீனா, பூட்டான், மலேசியா, இந்தோனேசியா, ரஷ்யா மற்றும் தான்சானியா போன்ற நாடுகளில் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் கொள்கலன்களின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இலங்கையில் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளில், புற்றுநோயை ஏற்படுத்தும் பிஸ்பெனோல் ஏ கண்டுபிடிக்கப்பட்டது.

எனினும் அத்தகைய தயாரிப்புகள் இன்னும் பயன்பாட்டில் உள்ளன என்று சுற்றுச்சூழல் நீதிக்கான மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சலனி ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளும், மலேசியா, சீனா மற்றும் இந்தோனேசியா நாடுகளும் ஏற்கனவே இவ்வாறான இரசாயனப் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன. பிஸ்பெனோல் ஏ புற்றுநோய்க்கு கூடுதலாக, இனப்பெருக்க அமைப்பின் செயலிழப்பை ஏற்படுத்தும் ஓர் இரசாயனம்.

இது பாலியல் தொடர்பான பாதிப்புகள் மற்றும் நீரிழிவு போன்ற பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தெரிவித்துள்ளன.

பல நாடுகள் இதை அபாயகரமான இரசாயனமாக சட்டப்பூர்வமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4-இ)

## எதிர்வரும் திங்கள் முதல் மருத்துவர்கள் போராட்டம்




கொழும்பு, பெப்.19

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், எதிர்வரும் திங்கட்கிழமை முதல், அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தயாராகின்றனர் என்று சங்கத்தின் மத்திய சபை உறுப்பினர், மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

சம்பளக் கொள்கையை மீறி அரசு தீர்மானம் எடுக்கின்றது. சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்தால், அதனை அரச கொள்கைக்கு அமையவே மேற்கொள்ள வேண்டும்.

எனினும், தற்போது அமைச்சரவைப்பத்திரம் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். அது நாயின் வேலையை கழுதை மேற்கொள்வதைப் போன்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4-இ)



## மின்னுற்பத்தி இயலுமை: ஜனாதிபதி ஆராய்வு

கொழும்பு, பெப்.19

நீர், சூரிய சக்தி, காற்று போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களைக் கொண்டு, மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேரடியாக ஆராய்ந்தார். கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபைக்கு நேற்றுச் சென்ற ஜனாதிபதி, அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்தார்.

2030 ஆம் ஆண்டாகும் போது, நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 வீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களின் மூலம் பெற்றுக்கொள்வதே அரசின் நோக்கம். அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டின் மூலம் குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதற்குள்ள இயலுமை உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. (எ-4-இ)

## நகைகள் திருட்டு: இளைஞர் கைது

வவுனியா, பெப்.19



இரு வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருமன்காடு நகர சபை விடுதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் 3 பவுண் நகை திருடப்பட்டிருந்தது.

அத்துடன் வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றிலும் 2 பவுண் நகை திருடப்பட்டிருந்தது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடியின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில், பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திஸாநாயக்க, திலீப், விக்கிரமசூரிய, பொலிஸ் கான்ஸ்டபிள் தயாளன் உள்ளடங்கிய குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதனடிப்படையில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4-18)

## இளைஞர் உயிர்மாய்ப்பு

மன்னார், பெப்.19

இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து தனது வீட்டில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

தாயார் கூறிய புத்திமதியை ஏற்றுக் கொள்ளாத இளைஞர் (வயது 22) இவ்வாறு தவறான முடிவெடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் இறந்தவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4-60)

## பூஸ்டர் டோஸ் செலுத்த மட்டக்களப்பில் ஆர்வம்

மட்டக்களப்பு, பெப்.19

கொரோனாத் தடுப்பூசி அட்டை பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் சோதனையிடப்படுவதால், மட்டக்களப்பில் பூஸ்டர் தடுப்பூசியைச் செலுத்த மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர். நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில், மக்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதே உயிரிழப்புக்களிலிருந்து பாதுகாப்பை ஏற்படுத்தும் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதனால் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவே தடுப்பூசி அட்டை சோதிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விரைந்து தடுப்பூசிகளைப் பெற்று வருகின்றனர். (எ-4-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அன்றே ஒன்றிணைந்திருந்தால்....!

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற குரல் இப்போது பலமாக ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது. இவ்வாறான குரல்கள் எழும்போதெல்லாம் ஆளுந்தரப்பிலிருந்து பலமான எதிர்வினையாற்றப்படும். ஆனால் இப்போது எதிர்வினையாற்றல் மென்வினையாற்றலாக மாறியிருக்கின்றது. சர்வதேச சமூகத்தின் பலமான நெருக்குதலால், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான குரல்களுக்கு அமைதியாகப் பதிலளிக்கின்றது ஆளும் தரப்பு.

1979ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் 43 ஆண்டுகளாக இலங்கை அரசமைப்பில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தின் விளைவால் முதலில் பலியாக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். உலகில் கடைந்தெடுத்த மோசமான பயங்கரவாத தடைச் சட்டம், எத்தனையோ தமிழர்களின் வாழ்வுக்கு சாவு மணியடித்திருக்கின்றது. மிக மோசமான இந்தச் சட்டத்துக்கு எதிராக தமிழர் தேசம் பலமாகக் குரல் கொடுத்திருக்கின்றது. அந்தச் சட்டம் அகற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்திருக்கின்றது. தமிழர் தேசம் குரல் கொடுத்தபோது, ஏனைய சமூகங்கள், இனத்தவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தார்கள். ஆளும் தரப்பும், புலிகளை ஒடுக்கின்றோம் என்ற பெயரில் அப்பாவித் தமிழ் மக்களைச் சிறை வைத்தபோது, தமிழர் தரப்பின் எதிர்ப்புக் குரல் ஏனைய சமூகங்களுக்கு நியாயமான குரலாகத் தெரியவில்லை. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதைப்போல இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் இப்போது தமிழர்களை மாத்திரமல்ல, ஏனைய இனங்களையும் குறிவைக்கத் தொடங்கியிருக்கின்றது.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் முஸ்லிம் சமூகத்துக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் உண்மை முகத்தை உணரக் கூடியதாக இருந்திருக்கும். அந்தச் சட்டத்தால் கேட்டுக்கேள்வியின்றி மேற்கொள்ளப்பட்ட கைதுகளும், நீண்ட காலத் தடுத்து வைப்புக்களும் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் எவ்வளவு தூரம் கைதானவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் வேதனைப்படுத்தியிருக்கும் என்பதை உணர்ந்திருப்பார்கள். இப்போது நீதிக்காகக் குரல் எழுப்பும் சிங்கள கத்தோலிக்க மதத்தவர்களுக்கு எதிராகவும் ஆட்சிபீடம் திரும்புகின்றது. ஆட்சிப்பீடத்துக்கு எதிரானவர்களை கேட்டுக்கேள்வியின்றி ஒடுக்குவதற்கு ஒரே மார்க்கம் பயங்கரவாதத் தடைச்சட்டம். அதனால்தான் ஆட்சிக்கு வரும் எவரும் அதனை நீக்குவதற்கு மனமுவந்து செயலாற்றுவதில்லை.

இப்போது கத்தோலிக்க மதத்தவர்களின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று குரல் கொடுக்கின்றார். முஸ்லிம் அரசியல் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் அதனையே வலியுறுத்துகின்றனர். இலங்கை அரசு சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொண்ட திருத்தங்களை, இந்த அரசின் மனித உரிமைகள் ஆணைக்குழுவே நிராகரித்திருக்கின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று கோரியிருக்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை தமிழர் தரப்பு மிக நீண்டகாலமாக முன்வைத்துவந்தாலும், ஆகக் குறைந்தது நாட்டில் போர் முடிவுக்கு வந்தது என்று அறிவிக்கப்பட்ட பின்னராவது தமிழர் தரப்புடன் இணைந்து இந்தக் கோரிக்கைக்கு வலுச் சேர்த்திருந்தால், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால் அப்போதெல்லாம், தமிழர் தரப்பின் பிரச்சினையாக மாத்திரம் இதனைப் பார்த்து ஏனைய சமூகங்கள் ஒதுங்கியதன் விளைவை அவர்கள் இப்போது அனுபவிக்கின்றார்கள். ஆயினும், காலங்கடந்த பின்னர், இப்போதாவது விழித்துக் கொண்டு தமிழர் தரப்புடன் இணைந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோருவதை வரவேற்கலாம்.

### நாளொரு நல்வார்த்தை

"எல்லோருடைய வாழ்க்கையும் நிரந்தரமற்றது. பிறகு ஏன் நிரந்தரமற்ற விடயங்களுக்காக கவலைப்பட வேண்டும்".
- புத்தர்




# வெளிநாடு செல்வோருக்கு நான்காம் கட்டத் தடுப்பூசி

**கொழும்பு, பெப்.19**

**வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு தேவையேற்படின் செயலூக்கி தடுப்பூசிக்கு மேலதிகமாக, நான்காம் கட்ட தடுப்பூசியை வழங்க முடியும். எவ்வாறிருப்பினும் நாட்டிலுள்ள அனைவருக்கும் நான்காம் கட்ட தடுப்பூசியை வழங்குவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சில நாடுகளில் நான்காம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள வைத்திய நிபுணத்துவ தரவுகளுக்கமையவும், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக்கு அமையவுமே இலங்கையில் நான்காம் கட்ட தடுப்பூசியை வழங்க முடியும். எனினும் இது தொடர்பில் எந்தவித பேச்சுகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (எ-இ)

# இந்திய வம்சாவளி மக்களுக்கு அரசியல் ஆவண வரைவு இறுதி!

கொழும்பு, பெப்.19

இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவண வரைவு, நாளை மறுதினம் கொழும்பில் கலந்துரையாடப்பட்டு, இறுதி வடிவம் பெறும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையின் பேரில், கண்டி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில், அதன் தலைவர் பி. முத்துலிங்கம் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் கௌதமன் பாலசந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த ஆவண வரைத் தயாரிக்கப்படுகின்றது. இந்த ஆவணம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அனைத்து கட்சித் தலைவர்கள், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட தமிழக கட்சித் தலைவர்கள், பிரிட்டன், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாட்டு அரசுகள், சர்வ தேச நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சேர்ப்பிக்கப்படும்.



அத்துடன் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4-இ)

நாளை 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை மாசி 08
சுபநேரம் : 09.32 - 11.02
ராகுகாலம் : 05.02 - 06.32
சங்கடஹரசதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்களின் விலை விரைவில் அதிகரிக்கும்!

## ஜே.வி.பி. ஆரூடம்



**கொழும்பு, பெப்.19**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள்களின் விலை விரைவில் அதிக ரிக்கப்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கடந்த காலங்களில் பணத்தைக் கொடுத்து எரிபொருளைப் பெற்றுக் கொண்டனர். இப்போது கடனுக்கே எரிபொருள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவும், கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவும் இந்தியாவிலிருந்து எரிபொருள்களை ஏற்றி வந்த கப்பலைப் பொறுப்பேற்கச் செல்கின்றனர். இது நகைப்புக்குரியது.
ஐ.ஓ.சி நிறுவனத்தில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தா பனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிலையங்களிலேயே மக்கள் பெற்றோலைக் கொள்வனவு செய்கின்றனர்.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்கினால் அதிகமான பெற்றோலை விற்பனை செய்வதனூடாக, மேலும் நட்டமடையும். கடனுக்கு அரசாங்கம் கொள்வனவு செய்யும் எரிபொருள்களும் விரைவாக தீர்ந்துவிடும்.
அதனால் ஐ.ஓ.சி நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் எரிபொருள்களின் விலையையைப் போன்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள்களின் விலையை விரைவில் அதிகரிக்கும் - என்றார். (எ-4-இ)

## உயர்மட்டப் பிரமுகர்களுக்கு நுழைவிசைவு வழங்க மறுப்பு

கொழும்பு, பெப்.19
நீதித்துறையில் அங்கம் வகிக்கும் உயர்மட்ட பிரமுகர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான நுழைவிசைவை வழங்க, கொழும்பிலுள்ள சில தூதரகங்கள் மறுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
அண்மைக்காலமாக நீதித்துறையின் சில செயற்பாடுகள் காரணமாகவே, இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க சில நாடுகள் தீர்மானித்துள்ளன என்று அறிய முடிகின்றது. ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், இப்படியான செயற்பாடுகள் இடம்பெறுவது சிறந்த சகுனங்கள் அல்ல. இராணுவ அதிகாரிகளின் மீதான தடைகளுக்குப் பின்னர், இப்போது புதிய தடைகள் வந்து கொண்டிருக்கின்றன.
குறிப்பாக நீதித்துறையின் உயர்மட்ட பிரமுகர்கள் பலரின் பிள்ளைகள் உயர் கற்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல விண்ணப்பித்திருந்த நிலையில், அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-4-இ)

### எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு

## 10 நிமிடங்களில் மட்டும் 1 மில்லியன் ரூபா இழப்பு

கொழும்பு, பெப்.19
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு, பத்து நிமிடங்களில் மட்டும் ஒரு மில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிற்சங்கப் போராட்டத்தால் இந்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.
பாகிஸ்தானின் கராச்சி நகருக்கு நேற்றுமுன்தினம் புறப்படவிருந்த விமானத்தில், 3 ஆயிரத்து 25 கிலோ கிராம் பெறுமதியான வெற்றிலைப் பொதியைக் கொண்டு செல்ல நிராகரித்தமையால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது.
இலங்கை விமானிகள் சங்கத்தில் சுமார் 180 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-4,இ)

## மருமகன் தாக்கி மாமனார் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.19
குடும்பத் தகராறு காரணமாக மாமனாரை மருமகன் தாக்கி கொலை செய்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. மாஹோ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலகொல்லாகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)



# க.பொ.த உயர்தரப்பரீட்சையில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி!

## இம்ரான் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப்.19
தற்போது நடைபெற்று வரும், க.பொ.த. உயர்தர உயிரியல் பாட வினாத்தாளில், தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
உயர்தரப் பரீட்சை மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். எனவே, இந்தப் பரீட்சை வினாத்தாள்கள் மயக்க நிலையிலன்றி தெளிவாக விளங்கிக் கொள்ள கூடியதாக இருக்கவேண்டும். அப்போதுதான் மாணவர்களால் வினாவுக்கேற்ற விடைகளை எழுத முடியும். அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்றதற்கான பிரதிபலனை அடைய முடியும்.
இந்த வருட உயிரியல் வினாத்தாளின் பல வினாக்களின் மொழிபெயர்ப்புப் பிழை காரணமாக, மாணவர்களால் தெளிவாக விடையைத் தீர்மானிக்க முடியாத நிலையேற்பட்டது. இதனால் பல மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது.
இது அவர்களது பல்கலைக்கழகத் தெரிவில் தாக்கத்தை ஏற்படுத்தும். பரீட்சைத் திணைக்களம் இந்த விடயத்தைக் கவனத்திற் கொண்டு உரிய பரிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டும். அல்லது இந்தப் பரீட்சையை இரத்துச் செய்து மீள் பரீட்சை நடத்தப்பட வேண்டும்.
பரீட்சையைக் கூட சரியாக நடத்த முயடியாத அளவுக்கு இந்த அரசாங்கம் மிகவும் பலவீனமடைந்துள்ளது. பொருளாதார ரீதியாக மக்களை கஷ்டத்தில் தள்ளி அன்றாட உணவுக்கு அல்லற்படும் நிலையையேற்படுத்தியுள்ள இந்த அரசாங்கம், இப்போது மாணவர்களின் எதிர்காலத்திலும் கைவைக்க ஆரம்பித்துள்ளது- என்றார். (எ-4-இ)

## களனி திஸ்ஸவின் பணிகள் நிறுத்தம்

கொழும்பு, பெப்.19
எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, களனிதிஸ்ஸமின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
இலங்கை மின்சார சபை இதனைத் தெரிவித்துள்ளது. எனினும் நாட்டில் மீண்டும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து, இதுவரையில் உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவிப்புகளும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4,இ)

# இலங்கைக்கான உதவிகளை உத்தரவாதத்துடன் வழங்குக

## இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு, பெப்.19
இந்தியாஇலங்கைக்கு வழங்கும் நிவாரண நிதியுதவிகளை, செயலாக்க உத்தரவாதத்துடன் வழங்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் அதன் பிரதமர் வி.உருத்திரகுமாரன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:
இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ம் சரத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை உறுதியான செயலாக்க உத்தரவாதத்துடனேயே, எந்தவொரு உதவிகளும் வழங்கப்பட வேண்டும். இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும். தமிழர் பகுதிகளுடன் சிங்களக் கிராமங்களை இணைத்து, தமிழர் பகுதிகளின் எல்லை வரையறை செய்வதை நிறுத்த வேண்டும். அதேவேளை இந்தியாவுக்கும் சீனத்துக்கும் இடையே இலங்கை அரசு நடுநிலை காப்பது போல் பாசாங்கு செய்கின்ற போதிலும், சீனாவுடனான உறவு குறுநில அரசின் உறவே என்பது தான் உண்மை. இதனை இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமான ஒரு தளமாகப் பயன்படுத்த முடியும்.
தமிழர்கள் அழிக்கப்படுவது மனிதகுல இழப்பாக மட்டுமல்ல இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கும் பெருங்கேடாகவும் அமையும் - என்றுள்ளது. (எ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
நல்லூர்க் கந்தப்பெருமான் துணை

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணுலகில்
08.07.1954

விண்ணுலகில்
21.01.2022

## அமரர் சீமாட்டி ரவீந்திரராஜா உதயகுமாரி

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், எமது பரந்துபட்ட உற்றார் உறவினர்களுடன் பாசப்பிணைப்பின் அன்புப் பாலமாய் வாழ்ந்த பெருமாட்டியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல், கொழும்பு பம்பலப்பிட்டி லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இத்தருணம் எமது உறவினர்கள், உற்ற நண்பர்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து, பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த நிகழ்வு சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே நடாத்தப்படும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அவரது ஈமக்கிரியைகளில் கலந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு எமக்கு உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் நேரடியாகவும், பத்திரிகை அனுதாபச் செய்தி பிரசுரவாயிலாகவும், தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் முகநூல் வாயிலாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மலர் மாலைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
திரு.மு. ரவீந்திரராஜா (கணவர்) - 071 220 3568
திரு.நிருஷன் (மகன்) - 071 480 8638
Dr. (திருமதி) தரங்கினி (மகள்) - 077 734 7570
திரு. அஸ்வினாஷ் (மருமகன்) - 077 554 5252
இல.79/6, W.A சில்வா மாவத்தை , கொழும்பு - 06.

(CS 42791) (3/6)

# அகமதாபாத் தொடர் குண்டுவெடிப்பு: 38 பேருக்குத் தூக்குத்தண்டனை

புதுடில்லி, பெப்.19

அகமதாபாத் தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடைய 38 பேருக்குத் தூக்குத் தண்டனையை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளது.

மேலும் 11 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு ஜுலை 26ஆம் திகதி அடுத்தடுத்து 21 இடங்களில் குண்டு வெடிப்புகள் இடம் பெற்றன.

இதில் 56 பேர் உயிரிழந்ததுடன் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தும் நோக்கில் மக்கள் வணிக வளாகங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்க ளில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியன.

இந்த வழக்கு விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் நேற்று தீர்ப்பளித்த நீதிமன்றம், 49 பேர் குற்றவாளிகள் என அறிவித்துள்ளது. இதில் 38 பேருக்கு மரணதண்டனையும் 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முன்னேறும் வழிகளை கண்டறிந்து அதைச் செயற்படுத்துவீர்கள். நல்ல உணவுகள் உண்ணும் வாய்ப்பு கிடைப்பதால் மகிழ்வீர்கள். பழைய முயற்சி ஒன்றுக்கு இப்போது வெற்றி கிடைக்கும்.

**இடபம்:** நீங்கள் மிகவும் ரசிக்கும் விஷயங்களை இன்று அனுபவிப்பீர்கள். உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. பணியாளர்கள் எடுத்த முயற்சியில் வெற்றி காண்பர்.

**மிதுனம்:** பிறர் நலனில் அக்கறை காட்டுவதால் அவர்கள் நன்றி பாராட்டுவர். நீங்கள் திட்டமிட்ட விஷயங்கள் தீர்மானித்தபடியே நடைபெறும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்:** உங்களைவிட வயதில் குறைந்தவர்களின் நட்பு கிடைக்கும். நண்பர்களின் கூட்டு முயற்சியால் நன்மை ஒன்றைச் செய்வீர்கள். உங்களது உழைப்புக்கு பலன் கிடைக்கும். போட்டியைச் சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகளை இன்று கண்டறிவீர்கள். முகம் தெரியாத ஒருவருக்கு உதவி செய்து அவரை நெகிழ வைப்பீர்கள். நியாயமாகச் செயற்படுவீர்கள்.

**கன்னி:** எதிரிகளின் முயற்சிகள் தோற்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மனம் மகிழும். வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். நெகிழ்ச்சியான நிகழ்வு இன்று நடைபெறும். நீண்ட நாள் வருத்தம் தீரும்.

**துலாம்:** நிதி நிலை சிறப்பாக இருக்கும். தாழ்வு மனப்பான்மை நீங்கும். மன உறுதி அதிகரிக்கும். வாழ்க்கை வசதிகள் பெருகும். முன்னேற்றத்திற்காக இன்று கூடுதலாக உழைப்பீர்கள். பிரச்சினைகள் குறையும் .

**விருச்சிகம்:** நிம்மதி அதிகரிக்கும். இன்று மகிழத்தக்க சம்பவம் ஒன்று நிகழும். நெருங்கிய நண்பர்களின் செயல்கள் மகிழ்ச்சியை கொடுக்கும். மனதில் நினைப்பவற்றை யாரிடமும் வெளிப்படையாக பேச வேண்டாம்

**தனுசு:** பிறருக்கு அன்பளிப்பு கொடுத்து மகிழ்வீர்கள். சேமிப்பில் ஆர்வம் கூடும். நினைத்த செயலை முடித்து நிம்மதி காண்பீர்கள். பிரச்சினை தீரும். மனதில் புதிய சிந்தனைகள் தோன்றி முன்னேற்றம் தரும்.

**மகரம்:** அவசரப்பட்டுப் படபடப்பாகப் பேசுவதால் பிரச்சினைக்கு ஆளாவீர்கள். யார் மனதையும் புண்படுத்தாதீர்கள். முரட்டுத்தனம் வேண்டாம். கோபத்தால் நல்ல நட்பை இழக்க வேண்டாம்.

**கும்பம்:** உங்களது வார்த்தைக்கு சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். நீங்கள் கோபமாக பேசினாலும் அதில் உள்ள நியாயத்தை பிறர் எடுத்துக் கொள்வர். இன்று குதூகலமும் கொண்டாட்டமும் இருக்கும்.

**மீனம்:** சிரமத்தை மறப்பீர்கள். சேமிப்பில் ஆர்வம் கூடும். வாழ்வில் முன்னேறுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். உறவினரின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாகனம் மோதி முதியவர் காயம்

வவுனியா, பெப்.19
கப் ரக வாகனம் மோதி, சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார். இந்த விபத்து வவுனியா குருமன்காட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
முதியவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.
அதேவேளை வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றபோது, அந்த வாகனம் மீண்டும் விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-4,110)

# கொரோனாத் தொற்று மன்னாரில் அதிகரிப்பு




மன்னார், பெப்.19
**மன்னார் மாவட்டத்தில் இதுவரை பதிவான கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3ஆயிரத்து 784 ஆக அதிகரித்துள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 23 கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.
இதன்படி பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை 400 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
இதையடுத்து இந்த வருடத்தில் பதிவான தொற்றாளர்களின் எண்ணிக்கை 601ஆக அதிகரித்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3ஆயிரத்து 784 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர் -என்றுள்ளது. (வ-56)

# நெல்லியடியில் நேற்று கையெழுத்து சேகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19
பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் நீக்குமாறு கோரி, வடமராட்சியில் நேற்றுக் கையெழுத்துப் பெறப்பட்டது. நெல்லியடி பேருந்து நிலையத்தில், பொதுமக்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர்களை விசாரணை இன்றிக் கைது செய்து, நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கும், மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளை கொண்ட பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4 ,20)



இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர், வாழைச்சேனை பேத்தாழை வீரையடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை, அமைப்பின் மட்டக்களப்பு ஒருங்கிணைப்பாளர் சிவத்திரு. பாஸ்கரனிடம் கையளித்தனர். (எ-ரி1,159)

# வடக்கு மாகாணத்தில் மழைக்குச் சாத்தியம்!

கொழும்பு, பெப்.19
வடக்கு மாகாணத்தில் மழை பெய்யும் சாத்தியம் உள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
இது தொடர்பில் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவாமாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும்என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.
இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.19
திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக, சூம் செயலிக்கூடாக நடத்தப்படும் ஆய்வரங்கத் தொடரின், ஒன்பதாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறும்.
யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், 'நீ. மரியசேவியர் அடிகளின் இலக்கிய நாடக எழுத்துருக்கள் மீதான பார்வை' என்னும் தலைப்பில், யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி வைதேகி செல்மர் எமில் ஆய்வை நிகழ்த்துவார்.
ஆர்வமுள்ளவர்கள் சூம் செயலி இலக்கம் 789364 4809, கடவுச் சொல் cpo ஊடாக இணைந்து கொள்ள முடியும். (எ-4.இ)

# ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஆராய்வு

முல்லைத்தீவு, பெப்.19
ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.
ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச செயலர் திருமதி. ப. ஜெயராணியின் நெறிப்படுத்தலில், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது 2022 ஆம் ஆண்டுக்கான திட்டங்களுக்கு அனுமதி பெறப்பட்டது. நீர்ப்பாசனம், சுகாதாரம், விவசாயம், கல்வி, போக்குவரத்துக்கு , வீதி, கால்நடை , காணி சம்பந்தமான பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பிரதேசசபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (எ-4,213)

# சட்டவிரோத மணல் அகழ்வு உழவியந்திரங்கள் பறிமுதல்

## சாரதிகளும் கைது



கிளிநொச்சி, பெப்.19
தருமபுரம் நெத்தலியாற்றுக் கரைப்பகுதியில், சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 உழவு இயந்திரங்கள் நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
தருமபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் [illegible] தகவலையடுத்து [illegible] துக்கு விரைந்த பொலிஸார் உழவு இயந்திரங்களைக் கைப்பற்றினர்.
அவற்றின் சாரதிகள் மூவரையும் கைது செய்தனர்.
சந்தேகநபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# யோகக்கலை பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், பெப். 19
வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், மகளிருக்கான யோகக்கலைப் பயிற்சிநெறி மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆர்வமுடையோர் அனைவரும் பங்குபற்றிப் பயனடைய முடியும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவை ஏமாற்ற அரசு மற்றுமொரு சதி

## அருட் தந்தை சக்திவேல் குற்றச்சாட்டு

**வவுனியா,பெப்.19**

**ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், "நீதிக்கான அணுகுதல்" வேலைத்திட்டம் மூலம், சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத்தூவ அரசு எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

நீதி அமைச்சர் அலி சப்ரி, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும் , போர் தொடர்பிலும் உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். இதனை சர்வதேச சமூகம் ஏற்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு உட்படுத்த வேண்டும்.

இதுவரை காலமும் ஆட்சியாளர்கள், வடக்கில் போர் நடைபெறவில்லை, அங்கு நடந்தது மக்களை மீட்கும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையே என்று கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் நீதியமைச்சர் போர் நடைபெற்றது என்பதை உறுதியாக்கியுள்ளார். இராணுவத்தினர் காணாமல் போனதைப் போன்று, விடுதலைப் புலிகள் தரப்பிலும், தமிழர் தரப்பிலும் காணாமலாக்கப்பட்டனர் என்பதை ஏற்றுக் கொள்கின்றார்.

ஆட்சியாளர்களால் முற்றாக அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளிடம் இனி விசாரணை நடத்த முடியாது.

நீதி அமைச்சரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், போரைத் தொடர்ந்த படை அதிகாரிகளை விசாரிக்க வேண்டும். உள்ளக விசாரணை என்பது ஏமாற்று நாடகம் என்று தெளிவாகின்றது. அதனால் சர்வதேச விசாரணையே வேண்டும்.

நீதியமைச்சர் ஆட்சியாளர்களின் அரசியலை மறைக்க முயல்கின்றார். எத்தனையோ கட்டப் பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் இவற்றையெல்லாம் கிழித்தெறிந்து, இன அழிப்பை தொடர்ந்ததோடு, ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் சர்வதேசத்தை ஏமாற்றியது யார்? இவற்றையெல்லாம் மறந்து பாலர் பாடசாலைப் பிள்ளைபோல் நீதி அமைச்சர் வெளியிடும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

கல்விமான்களும், புத்திஜீவிகளும் நாட்டை விட்டு வெளியேறியமைக்கு அடக்குமுறை இன அழிப்புப் போரே காரணம்.

தொடர்ந்து இன அழிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு, நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு உட்படுத்தவும் , மக்களின் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தி, அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கவும் வேண்டும் -என்றுள்ளது.

(எ-4-110)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**சாரதிகளுக்கான பதவி வெற்றிடம் - 5 வெற்றிடங்கள்**

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 26 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்டின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஒட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு (கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் அண்டிய பகுதிகள்) மாவட்ட நகரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 26 பெப்ரவரி 2022 சனிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**மனித வள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

(cr.37103) (2.6)

# லான்சாவுக்கு அச்சுறுத்தல்

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கு, தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிராமிய மற்றும் பிரதேச குடிதண்ணீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரான சனத் நிஷாந்தவே இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-4-இ)

## துயர் பகிர்கிறோம்



தோற்றம் 13.01.1939 மறைவு 09.02.2022

இசையமைப்பாளர் ந.செல்வச்சந்திரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### மரியார் நடேசு

அவர்கள் கடந்த 09.02.2022 நல்லைக்கந்தன் பாதம் இறையடி சேர்ந்தமையையிட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதுடன் குடும்பத்தினருக்கும், கலைஞர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து நிற்கிறோம்.

(cs.43005) (2.6)

**யாழ். - கலைஞர்கள் வட்டம்**

## கண்ணீர் அஞ்சலி



**தோற்றம் 18.04.1935** **மறைவு 17.02.2022**

எமது காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் **இராதாகிருஸ்ணன்** அவர்களின் அன்புத் தந்தை

### அம்பலவாணர் பஞ்சாட்சரம்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் - காரைநகர்.**

(CR 7300)1-6

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லமுத்து நவரத்தினம் (கமலா)

நுணாவில் மேற்கு சாவகச்சேரியை சொந்த இடமாகவும், முல்லைத்தீவு பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து நவரத்தினம் (கமலா) நேற்று (18.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு- தங்கமுத்து தம்பதியரின் ஏக புதல்வியும், நடராசா நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், றஞ்சனா (பிரதேச செயலாளர் - மாந்தை கிழக்கு) அவர்களின் அன்புத் தாயாரும், அமரர் விஜயரத்தினம், வரதலிங்கம், அமரர் தேவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2022) ஞாயிற்றுக் கிழமை பாண்டியன்குளம் பிரதேச செயலக விடுதியில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக பாண்டியன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 37104) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 06 1934

மறைவு 15 02 2022



## திரு. பேரம்பலம் பாலசுப்பிரமணியம் (பாலா)

**(அகில இலங்கை சமாதான நீதவான்,**
**ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்)**

வண்ணார்பண்ணை, கலட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.பேரம்பலம் பாலசுப்பிரமணியம் (பாலா) அவர்கள் 15.02.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் பூரணம் தம்பதியினரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவகங்கை தம்பதியரின் மருமகனும் திருமதி சாந்தகுமாரியின் அன்புக்கணவரும் ஜனகன் (டென்மார்க்), ஜனனி (இலண்டன்), ஜனப்பிரியா (ஜேர்மனி), ஜனதீபா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீ சிவாஜினி, சக்திபாலன், சுரேந்திரன், பாலகுகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்திகா, சுருதிகா, பத்மஜன், ஜனோஜன், மாளவிகா, ஓவியா, சௌமியா, ராகவி, ஆருதி ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சச்சிதானந்தம் மற்றும் தனலட்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, குமாரசாமி, பரராஜசிங்கம் மற்றும் கனகரட்ணம் (இலங்கை), மாணிக்கராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கமலாதேவி, செல்வரட்ணம், பத்மநாதன் மற்றும் சகுந்தலா, ஞானேஸ்வரி, பாலதேவி, இரத்தினமலர், ஜெகராஜசேகரம், வருதினிதேவி, ஜெயசீலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை 9.00am - 3.00pm அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (Mahinda Funeral Directors, No.591, Galle Road, Mount Lavinia இல்) கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு :
0094112362746, 077 6043804

தகவல் : குடும்பத்தினர்
49B, 33rd Lane, Wellawatta, Colombo-06.

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 04 . 1940

இறப்பு 17 . 02 . 2022



## எட்வேட்ராஜா பிலோமினா

யாழ். வசாவிளானைப் பிறப்பிடமாகவும், இளவாலை பத்தாவத்தை மற்றும் பாண்டியன்தாழ்வு விதான்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட்ராஜா பிலோமினா அவர்கள் 17.02.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை மரிய ஞானரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும், எட்வினா(கனடா), ராஜினா (ஜேர்மனி), அருட்சகோதரி வேஜி (திருச்சிலுவை கன்னியர்), ராஜநாதன் (கனடா), அருட்தந்தை எட்வினாதன் (நிதியாளர், ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றெஜினா (இத்தாலி), திரேசம்மா (கனடா), இம்மானுவேல், காலஞ்சென்றவர்களான லூயிஸ் அல்பிரட், அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம் மற்றும் லூட்ஸ் (கனடா), பேர்னடேற் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்ரன் பரமநாயகம் (கனடா), ஜோய் (ஜேர்மனி), பெலிஷியா (நிறோ- கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கரோலினா (கனடா), மிஸேலா (ஜேர்மனி), ஷெரினா (கனடா), எட்றியன் (கனடா), அஸ்லின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், அல்பிரட் பரராஜசிங்கம், ஜோசப் நவரட்ணம், பிரான்சிஸ் சேவியர், மேரிதிரேசா சவுந்தரநாயகி, அருட்சகோதரி ஹயசிந் (திருக்குடும்பக் கன்னியர்), மற்றும் விக்டர் இம்மானுவேல் (பிரான்ஸ்), கருணாதிராசா (கனடா), மேரி திரேசா, நேசமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜர் அவர்களின் அன்புச் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.02.2022 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 9.30 மணியளவில் பாண்டியந்தாழ்வு இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அதனை தொடர்ந்து மு.ப 10.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பத்தாவத்தையில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 03:00 மணிக்கு சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
1. அருட்தந்தை எட்வினாதன் (மகன்) - 94772487800
2. அருட் சகோதரி வேஜி (மகள்) - 94773566646
3. எட்வினா (மகள்) - 0016477681808
4. ராஜினா (மகள்) - 00491794281545
5. ராஜநாதன் (மகன்) - 0016477161587


தகவல்:
குடும்பத்தினர்

(CR 7298) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 03 . 1942

மறைவு 18 . 02 . 2022



## இராசையா சிதம்பரநாதன் (பத்மநாதன்)

**(Retired Anti Malaria Field Officer)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிதம்பரநாதன் நேற்று (18.02.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராசையா சௌபாக்கியவதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஞானம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், மயூரன் (HNB சுன்னாகம்), நிருயா, காலஞ்சென்ற நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், அர்ஜனாவின் (ஆசிரியர், மாங்குளம் ம.வி) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி கமலாதேவி, கோபாலகிருஷ்ணன், குணமணிதேவி, லோகநாதன் மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகேசன் மற்றும் திருநாவுக்கரசு, பகவதி, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சரஸ்வதி, சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
சி.மயூரன்
077 153 9174

# மரண அறிவித்தல்

வையத்துள் 12 . 10 . 1943

தெய்வத்துள் 18 . 02 . 2022



## தெய்வத்திரு சின்னத்தம்பி ஆறுமுகம்

தண்ணீரூற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் (ஓட்டுத் தொழிற்சாலையடி ஒட்டுசுட்டானில் வசித்தவரும்) சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள் நேற்று (18.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் தெய்வத்திரு சந்திரமலர் அவர்களின் அன்புக் கணவரும், வாமதேவன் (கணக்காய்வு உத்தியோகத்தர், மாகாண கணக்காய்வு அலுவலகம்), ஹரன் (பிரதேச களஞ்சியக் காப்பாளர், இ.போ.ச. கோண்டாவில்), வானதி (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகிழினி (மருந்தாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), சிவப்பிரியா (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), சிறிரமணன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபதீசனின் பேரனும், கணபதிப்பிள்ளை (தண்ணீரூற்று), காலஞ்சென்றவர்களான இராசம்மா, மனோன்மணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.91, சட்டநாதர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 400 2286

(CR 7299) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடற்கதை நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழ் வாரிதி வீரசிங்கம் பிரதீபனின் ஆடற்கதை நாட்டிய நாடக நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு குறித்த நிகழ்வு இடம்பெறும். சூரியயாழினி வீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (ம- 110)

## சிறுகதை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 19

சித்தாந்தனின் 'அம்ருதாவின் புதிர் வட்டங்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீடு, திருநெல்வேலி தூண்டி இலக்கிய வட்ட அலுவலகத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. கவிஞர் சோ.பத்மநாதனின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், கவிஞர் கருணாகரன், எழுத்தாளர் மயூரரூபன் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ம)

இலங்கைக்கு கடத்தவிருந்த

## 400 கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்பு

சென்னை, பெப். 19

இலங்கைக்கு கடத்தவிருந்த 400 கிலோ கஞ்சா தமிழகம் நாகப்பட்டினத்தில் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

தமிழகப் பொலிஸாருக்கு இலங்கையில் இருந்து கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளை அடுத்தே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம)

**வேலையாட்கள் தேவை**

இருபாலையில் இயங்கும் OFNIR வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை.

(CS 42992) (3/6) 077 353 3964

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் இராணி வீதியில் வீட்டுடன் கூடிய நிலப்பரப்பு 02 விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டியதில்லை

(CS 42992) (3/6) 076 738 5632

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

077 153 1167

**காணி விற்பனைக்கு**

மன்னார் பெரியக்கடை உப்பள வீதியில் இலக்கம் 74/3, அமைந்துள்ள 13 1/2 பேர்ஜ் காணி, வீடு விற்பனைக்குண்டு.

(cr37600) (2.6)

பெர்ணன்டோ - 077 981 4111

தயாளன் - 074 007 8791

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அம்பலவாணர் வீதியில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (அத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

(cs 42993) (2.6)

077 759 2935, 077 338 4367

**வேலை வாய்ப்பு**

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

❖ பொதி சுமப்பவர் ❖ பொதி செய்பவர்

❖ மற்றும் உதவியாளர்கள்

யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை (21 - 35) இற்கு இடைப்பட்ட ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்

இல. 58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4766

(CS 42954) (3/6)

## மரண அறிவித்தல்



அமரர்

**பூபாலசிங்கம் தனபாக்கியம்**

யாழ். மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் மானிப்பாய், மட்டக்களப்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் தனபாக்கியம் அவர்கள் 16.02.2022 புதன்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்றவர்களான கதிரேசு - ஆச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் (BOC, Batticaloa, Chief Shroff) அவர்களின் அன்பு மனைவியும் மகாலிங்கம் காலஞ் சென்றவர்களான ஸ்ரீபற்குணராஜா, தங்கேஸ்வரியின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற விஜயகுமாரினதும் மற்றும் ஜெயகுமாரன், பாலகுமாரன், விஜயராணி, ஜெயராணி, இந்திராணி, கலைவாணி, கவிதா ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற அருந்தவராணியினதும் மற்றும் கமலவதனி, பிருந்தா, சபாநாதன், யோகநாதன், ராஜன், ரவி, ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிரோஷன், நிரோஷினி, கிளௌடியா, புளோரியான், மயூரன், அனுஷ்கா, அஸ்வன், கரிஷ்வன், சுகிசன், மயூரிகா ஆகியோரின் அன்புமிகு பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 முதல் இறுதி அஞ்சலிக்காக மஹிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு, பகல் 12 மணியளவில் ஈமக்கிரியைகளின் பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு - மகன் ஜெயகுமார் (0779213609)

பாலகுமாரன் 00447859925522

மகள் ஜெயராணி 0764007724

## கண்ணீர் அஞ்சலி



தெகிவளையை வசிப்பிடமாகக் கொண்ட **பூபாலசிங்கம் ஜெயக்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

**தனபாக்கியம் பூபாலசிங்கம்**

16.02.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்ினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில்

திரு.கந்தையா பூலோகரட்ணம்

திருமதி மதிவதனி பூலோகரட்ணம்

(cs 42998) (2.6)

## 25 ஆம் ஆண்டு நினைவு



மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) தோற்றம் :- 23.06.1974

திருச்செல்வம் கம்சினி தோற்றம் :- 05.06.1996

சிவலிங்கம் திருச்செல்வம் தோற்றம் :- 08.02.1972

மறைவு:-19.02.1997

பிறந்து ஐம்பது ஆண்டுகள் சென்றது
மறைந்தோ இருபத்தைந்து ஆண்டுகள் சென்றுவிட்டதே
ஆனாலும் உங்கள் நினைவோ மறக்கமுடியாதுள்ளதே

என்றும் உங்கள் நினைவுடன்

சி.தேவகுஞ்சரம், கதிரிப்பாய், அச்சுவேலி.

அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.

(cs 42973) (2.6)

## THE YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION - JAFFNA

Proudly Presents

**The Best Performance Appreciation Award for**

Students of GCE A/L Examination 2020, Northern Province

- First Rank (GCE A/L Examination 2020) Rs.35,000/= Cash Prize, Shield & Certificate
- Second Rank (GCE A/L Examination 2020) Rs.25,000/= Cash Prize, Shield & Certificate
- YMCA Jaffna Debate Shield to the winner of the Inter School Debate, each Participant will receive a cash voucher of Rs. 5,000/-
- Bilingual Excellence Award of Rs 20,000/- each for a Male and Female winner
- Best All-rounder's Award of Rs 35,000/- each for a Male and Female winner
- Best Medical Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Physical Science Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Engineering Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Nursing Students Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Computer -Eng Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Agriculture Science Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Two deserving schools to be presented, books worth of Rs50,000/- each

**Chief Guest**

Rt.Rev.Dr.Justin B Gnanapragasam
The Bishop,
Roman Catholic Diocese of Jaffna, Jaffna

**Guest of Honor**

Hon. Jeevan Thiagarajah
Hon. Governor, Northern Province

**Special Guests**

Mr.K.Mahesan
District Secretary, District Secretariat, Jaffna.

Mr.T.John Quintuss, Additional Provincial Director of Education, Northern Province

Mr.M.Rathakrishanan, Zonal Director, Jaffna Education Office, Jaffna

Mr.J.Vilvarajah, Founder, Western Tamil School Canada

We have great pleasure in inviting the Members and Well- wishers to participate at the Award Ceremony to be held on Saturday 19th February 2022 at 03.00 pm, at the Main Hall, YMCA.

President, Board of Directors,
General Secretary & Staff, YMCA Jaffna.

(CR 37586) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கார்த்திகேசு சந்திரராசா

(SLAS)

(முன்னாள் பிரதேச செயலர் வலி. மேற்கு, சங்கானை)

(திட்ட இணைப்பாளர் UNHCR)

மலர்வு 30.01.1939 — உதிர்வு 19.02.2003

திதி: 19.02.2022

ஓர் பத்து ஒன்பது ஆண்டுகள் சென்றும் - அப்பா
நீரெம்மை விட்டு மறைந்த துயர் தீராதாம் அப்பா
சீரோடு நாம் வாழ சிறந்த வழிகாட்டி வைத்தீர்கள்
ஊர் போற்றும் பணியினை உயர்வாக ஆற்றியே
பேர் கூறப் பிரதேச செயலராய் வாழ்ந்தீரே
பெயரே எமையும் பெருமையுற வைக்குதப்பா...
என்றும் மறவோம் மறவோம் அப்பா!
இறைவனின் பாதத்தில் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"இராஜஸ்தான்"
பறாளாய் வீதி, சுழிபுரம்.

(cs.1153) (2.6)

துயர்பகிரும்
குடும்பத்தினர்

---

## Global NIHR - AF Project, Faculty of Medicine, University of Jaffna.

**Post of the Temporary Data Collecting Assistant (on Contract Basis) Vacant – 08 posts**

University of Jaffna, Sri Lanka established a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK

**Requirements:**

- o 03 passes in G.C.E Advance Level (A/L)
- o Preference will be given those who are having experience in the health research related data collection.
- o Selected candidates will be appointed as full time on contract basis for five months
- o Should be a citizen of Sri Lanka.
- o Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- o Age should be not less than 21 years and not more than 35 years.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 (fixed) will be paid. Selected candidates should contribute 8% of the salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of the salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.

Applicants are requested to send the prescribed application form downloaded from the University website along with copies of the Education Certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna**. In order to avoid any delay applicant have to submit their application form with the scanned copy of the all relevant documents (mentioned above) through the E-mail (afsl@univ.jfn.ac.lk) on or before 02.03.2022.

Incomplete, Illegible applications and applications received after the closing date will be rejected without intimation and **only short- listed applicants** will be called for interview via zoom. Zoom Link will be sent it for the short listed applicants via email.

For further details please refer the University of Jaffna website - www.jfn.ac.lk

Registrar
University of Jaffna.

(cr.37101) (2.6)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 04 . 1951



உதிர்வு 01 . 03 . 2021

### அமரர் கந்தையா சிவராசா

(உரிமையாளர் நிமலன்ஸ் மின்னகம் கிளிநொச்சி)

திதி : மாசி அபரபக்க திருதியை [19.02.2022]

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பாரினில் நாம் சிறப்புற வாழ வழிகாட்டியாய் திகழ்ந்தீர்கள்
காலப் பெரு வெள்ளத்தால் அணைந்து போகாத
பெரும் நினைவுச் சுடரென எம் மனதில் என்றென்றும் நிறைந்திருப்பீர்கள்
நினைவு முற்றத்தில் எம்மோடு எப்போதும்
நீக்கமறக் கலந்திருப்பீர்கள் அன்புத் தந்தையே! ஆண்டொன்றென்ன
ஆண்டுகள் பல கடந்தாலும்
எம்முள் என்றென்றும் ஆத்மார்த்தமாய் நிறைந்திருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'அன்னம் இல்லம்'
24/2 பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 18210) (3/6)

---

## மரண அறிவித்தல்



### திருமதி நாகம்மா இராமச்சந்திரன்

கட்டுவன் தண்ணீர்த்தாழ்வை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா இராமச்சந்திரன் கடந்த (15.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பழனியப்பா - குழந்தையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், சிவதாசன் (லண்டன்), சிவபாதம் (பிரான்ஸ்), சிவாஜினி, சிவகுமாரன் (கனடா), சிவசந்திரா (ஆசிரியர் - யா/ மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி (லண்டன்), மீரா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சண்முகநாதன் (G.S), லலிதா (கனடா), தவராஜா (ஆசிரியர் - யா/ மகாஜனக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கோமதி - செந்தூரன், கௌதமி - ஸ்கந்தா, சுபாங்கி - செந்தூரன், சுஜீவன் - ஸ்ரெனி, மிலானி - பிரவீனன், லக்சன், அபிநயா, மதுரன், கோபிகன், மதுமிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹரிஸன், சச்சின், அஜய், அஞ்சனா, றெயான், நேகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.

"மதுரம்"
நீதி மன்ற வீதி, மல்லாகம்.

(cs42991) (2.6)

தகவல்: குடும்பத்தினர்
021 224 1199

---

## மரண அறிவித்தல்



### மார்சலீன்பிள்ளை - தோமஸ் சுபேந்திரன்

நெடியகாடு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், தெணியம்பை வீதி, வல்வெட்டித் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்சலீன்பிள்ளை - தோமஸ் சுபேந்திரன் நேற்று முன்தினம் (17.02.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாடக மாமணி சாமிநாதபிள்ளை - மார்சலீன்பிள்ளை (செல்வராஜா மாஸ்ரர்) மரியமுத்து தம்பதியரின் அன்பு மகனும், மடுமலர் இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/புனித பத்திரிசியார் கல்லூரி), ஹூர்துமலர் ஞானேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ சிதம்பரக் கல்லூரி), அன்னைமலர் அமலேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ருத்திரகுமாரன், செல்வரட்ணம் (அவுஸ்ரேலியா), யோகீஸ்வரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சித்திரா (நியூசிலாந்து), ராஜன் (கனடா), றூபன், காலஞ்சென்ற றோகன் மற்றும் வினிதா, காலஞ்சென்ற தங்கா மற்றும் ரவின், கிரிதரன் (நியூசிலாந்து), யூட்சி (கனடா), சௌதாமினி (மாநகர சபை - யாழ்ப்பாணம்), டினோஷா (ஆசிரியை - யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அவிஸ்கன் (நியூசிலாந்து), அனோஸ்கன் (நியூசிலாந்து), அஷ்விதா (நியூசிலாந்து), ரேணுகா (கனடா), ருவான்சன் (கனடா), அபிஸ்குமரன் (கனடா), யதுரா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (19.02.2022) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ne 18213) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தங்கேணியில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 19

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தங்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்த ஒன்றரைப் பவுண் நகை, சைக்கிள், முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கிய பெட்டகம் என்பன களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-27)



# 'ஈயூனிஸ்' புயல் இங்கிலாந்தை உலுக்கியது!

லண்டன், பெப். 19

இங்கிலாந்தின் தெற்கு, தென் கிழக்குப் பகுதிகளை மிகப் பலமான புயல்காற்று தாக்கியிருக்கின்றது. 'ஈயூனிஸ்' எனப் பெயரிடப்பட்டிருக்கின்ற இந்தப் புயலினால் பரவலாகப் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வீதிப்போக்குவரத்துகள், ரயில், விமானப் பயணங்கள் ஸ்தம்பித்திருக்கின்றன.

விமானங்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் தரையிறங்குவதற்குத் தள்ளாடுகின்ற காட்சிகளைப் பலரும் சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர். மணிக்கு 122 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புயல் காற்றினால் மரங்கள் முறிந்தும் கூரைகள் பறந்தும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. பல்லாயிரக்கணக்கான குடியிருப்புகளுக்கான மின் விநியோகம்துண்டிக்கப்பட்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற லண்டன் கலையக மண்டபத்தின் கூரையின் ஒருபகுதியை புயல் பிய்த்தெறிந்திருக்கிறது.

கடந்த மூன்று தசாப்த காலத்திற்குப்பின்னர் நாட்டைக் கடக்கின்ற மிகப்பலமான சூறாவளிக் காற்று இது என்பதால் மிக அரிதான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிறுபான்மையினரை...

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் கையெழுத்துச் சேகரிப்பில் நேற்றுத் தனது ஒப்பத்தை வைத்த பின்னர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு எதிராக மக்களுக்கு எதிராக பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ராஜபக்சக்ளின் ஆட்சியில் சிறுபான்மை மக்களை அடக்குவதற்கே இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது - பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போதைய ஆட்சிக்காலத்தில் அரசை விமர்சிப்போரை பழிவாங்கும் வகையிலும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம். குற்றவாளிகளை தப்பிக்கவிட்டு அப்பாவிகளை சிறையிலிடுவதற்கும் தற்போது ராஜபக்சக்களுக்கு இந்தச் சட்டம் துணை போகின்றது. எனவே இவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் அல்லது தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு அது முழுவதுமாகத் திருத்தியமைக்க வேண்டும் - என்றார். (அ-ம-22)

## தாயகம்...

அவர்கள், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையின் அடிப்படையில் அவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். இவர்கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டபோதும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக அவர்களின் விடுதலை தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பூஜித,...

சுந்தர, மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

2019 ஏப்ரல் 7ஆம் திகதிக்கும் 2019 ஏப்ரல் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், தேசிய உளவுச் சேவையின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தனவிடம் இருந்து கிடைக்கப் பெற்ற, இரகசிய மற்றும் உளவுத் தகவல்களை கணக்கில் கொள்ளாது இருந்தமை, அதனை மையப்படுத்தி நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பூஜித ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகிய இருவருக்கும் எதிராக மூவர் கொண்ட விசேட நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் தனித்தனியாக வழக்கு விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கான கோரிக்கை சட்டமா அதிபரால், பிரதம நீதியரசரிடம் எழுத்து மூலம் கடந்த 2021ஆண்டு மே 3ஆம் திகதி கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியல்...

நிகழ்ச்சி நிரலின் திட்டமிட்ட நாடகம் என்று விமர்சித்துள்ளார் பிரதமரின் இணைப்பாளர் காசிலிங்கம் கீதநாத்.

இது குறித்து அவர் தனது ருவிற்றர் பதிவில் மேலும் தெரிவிக்கையில்

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக இன்று கையெழுத்துச் சேகரிக்கும் தரப்பினர், மைத்திரி - ரணில் கூட்டரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவை வழங்கியவர்கள்தான். இவர்கள் அந்த அரசாங்கத்துக்கு அழுத்தத்தை வழங்கி குறித்த சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாம். அல்லது சட்டத்தை நீக்கியிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்போது அதைச் செய்திருக்கவில்லை. சிறுபான்மைக் கட்சிகளைச் சார்ந்து தமது இருப்பைத் தக்கவைத்த அரசாங்கத்தில் பேரம் பேசாத இவர்கள், இப்போது தமது நாடகத்தை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டுள்ளார்கள் - என்றுள்ளார். (அ-ம)

## தடுப்பூசி...

தருகின்ற பக்தர்கள் தடுப்பூசியை முழுமையாகப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

திருக்கேதீச்சர ஆலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போதே மன்னார் மாவட்டச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தை விட இந்த வருடம் சிவராத்திரிக்காக நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகைதர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பேண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

திருக்கேதீச்சரத்துக்கு வருகைதரும் பக்தர்கள் கொரோனாத் தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும். தடுப்பூசியை பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரமாக தடுப்பூசி அட்டையைக் கொண்டுவர வேண்டும். குறைந்தபட்சம் தடுப்பூசி அட்டையைக் கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்தாவது வரவேண்டும். கடமையில் ஈடுபடுத்தப்படும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நுழைவாயிலில் இது தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்.

உணவு வழங்குவதற்கான வியாபார நிலையங்கள் அமைக்கப்படும். ஆனால் உணவை உணவகங்களில் இருந்தவாறு சாப்பிடுவதற்கு அனுமதி இல்லை. பாலாவி தீர்த்தத்தில் இறங்கி குளிப்பதற்கு சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்படவில்லை. தனியார் மற்றும் அரச வாகனங்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் ஏனைய அவசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-56)

## அரச...

மொழியப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

சில மணிநேரங்கள் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சில முக்கிய தீர்மானங்கள் இருதரப்புச் சம்மதத்துடன் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன

1) சுகாதாரத் துறையின் சம்பளம் மற்றும் அது தொடர்பான திருத்தங்கள் அமைச்சரவை தீர்மானங்கள் மூலம் மேற்கொள்ளப்படாது என்பதை சுகாதார அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

2) அனைத்து சம்பளம் மற்றும் தொடர்புடைய திருத்தங்கள் அமைச்சரவைக்கு ஒரு குறிப்பு மூலம் தேசிய சம்பள ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைக்கப்படும்.

3) தேசிய சம்பள கொள்கைக்கு ஏற்ப அனைத்துத் திருத்தங்களும் தேசிய சம்பள ஆணைக்குழு மூலம் செய்யப்படும்.

4) தர மருத்துவ அலுவலர்களின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்திர இடமாற்றப் பட்டியலை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியிட சுகாதார பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

5) இலங்கை மருத்துவ சபையின் தேர்தல் விதிமுறைகள் தொடர்பான வர்த்தமானிக்கு ஒப்புதல் அளிப்பதற்கான நாடாளுமன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

6) அடிப்படை தரத்தை ஒழித்து, சிறப்பு மருத்துவ அதிகாரிகள் மற்றும் தர மருத்துவ அதிகாரிகள் இருவருக்கும் ஓர் உயர் தரத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவை பரிந்துரைத்து அனுப்புமாறு சுகாதார செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

7) சம்பளம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினையை சுகாதார செயலாளர் மூலம் தேவையான அதிகாரிகள் மற்றும் அமைச்சரவைக்கு அனுப்ப ஒப்புக்கொள்ளப்பட்டது. (அ-ம)

## வெட்டு...

வர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளாந்தம் மின் துண்டிப்பை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையிலான நேரத்தில் தினமும் ஒரு மணிநேர மின் துண்டிப்பும் மாலை 6.30 மணிமுதல் இரவு 10.30 மணிவரையான நேரத்தில் 45 நிமிட மின்துண்டிப்புமாக மொத்தம் ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள் மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும். இன்றுமுதல் (நேற்று) இந்த மின்துண்டிப்பை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## பயங்கரவாதத்....

சேகரித்து வருகின்றனர். இதில் நேற்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் கையொப்பமிட்டார். பின்னர் இது தொடர்பில் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக மோசமானது. அதில் திருத்தங்களை மேற்கொள்வதால் பயனில்லை. அந்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். மக்களின் உரிமைகளை - சுதந்திரத்தை - பேணிப் பாதுகாக்கும் வகையில் இந்தக் கருமம் ஆற்றப்பட வேண்டும் - என்றார். (அ-ம-22)

## 24 பவுண்...

ஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இந்தத் திருட்டு இடம்பெற்றது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையிலேயே, வேலணையில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் மேற்படி நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வேலணையைச் சேர்ந்த 24 வயதுடைய முதன்மைச் சந்தேக நபர் கஸ்தூரியார் வீதியில் வைத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, 25 மற்றும் 30 வயதுடைய மற்றைய இரு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர். முதன்மைச் சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர். கைதுசெய்யப்பட்ட மூன்று பேரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26)

## அராலியில்...

குறித்த பெண் சிகிச்சைக்காக வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்குச் சென்றுவிட்டு வீடு செல்வதற்கு பேருந்துக்காக காத்திருந்துள்ளார். அந்நேரம் அவ்வழியே மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணொருவர் அவருடைய தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். சந்தேக நபர் இனங்காணப்பட்டுள்ளார். அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ம-27-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து 'மோசம்'

புதுடில்லி, பெப்.19 இந்தியத்தலைநகர் டில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமான நிலையிலேயே நீடிக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு காற்றின் தரக்குறியீடு 232 என்ற அளவில் உள்ளது. டில்லி பல்கலைக்கழக பகுதியில் 273 ஆகவும், லோதி சாலையில் 201 ஆகவும், இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் 3வது நுழைவு வாயில் பகுதியில் 249 ஆகவும் காற்றின் தரக்குறியீடு உள்ளது என காற்றின் தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. (ச)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப் பட்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
A-32 பிரதான வீதியில் இருந்து 600 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 25 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.
பயன்தரும் 107 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 350,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 300,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578


## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 . 08 . 1937



மறைவு 12 . 01 . 2022

திருமதி

### செல்லப்பாக்கியம் - சிவானந்தம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்)

இன்பர்சிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பாக்கியம் - சிவானந்தம் அவர்களது அந்தியேட்டி கிரியைகள் இன்று (19.02.2022) சனிக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிரியைகள் அன்றைய தினம் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"ஜலதீபம்"
இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

அன்புடன்
குடும்பத்தினர்.
071 321 6996

(cs.18212) 92.6)

## 12ஆம் ஆண்டு நினைவுக் கோலங்கள்



யாழ். தென்மராட்சி சாவகச்சேரி வடக்கு, ஆசிரியர் வீதியைப் பிறப்பிடமாகவும், மடத்தடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இந்து ஆரம்ப பாடசாலைகளில் நீண்ட கால ஆசானுமாகிய பண்பாளர்

அமரர்

### சுப்பையா நடராஜன்

அவர்களின்
12 ஆம் ஆண்டு நினைவுக் கோலங்கள்

அன்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் சிகரமாகவும்
வாழ்ந்த எம் அன்புத் தந்தையே!

விழிமூடி எம்மை வழிகாட்டும் எங்கள்
ஒளியான தந்தையே – ஓடி வருவீரோ!
எம் நல்வாழ்வை காண நேரில் வருவீரோ!
வாழ்வை வென்று விட்டேன் என்று
வானகம் நீ சென்று விட்டாய்
ஏங்கித் தவித்து இன்று
12 ஆண்டுகள் முடித்து விட்டோம்
நித்தமும் எங்கள் நினைவில் நின்று கொண்டு
நிஜத்தில் இறைவனுடன் கலந்திட்ட உங்கள்
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

(CS 18995) (3.6)

மலர்வு 21.06.1934

உதிர்வு 02.03.2010

'திருத்தணிகை"
மடத்தடி வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.